# சன்மார்க்கம் - ஞானப் போற்றி

2561

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY, TANJORE.
RECEIVED
9 - OCT 1965

போற்றி ஓம் போற்றி

போற்றி சிவம் போற்றி

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY * TANJORE *

ஆக்கியோன்

**வீ. மகாராச பிள்ளை L. M. P.**

12—10—'60

# மார்க்கம் - ஞானப் போற்றி

2561

20700

போற்றி ஓம் போற்றி

போற்றி சிவம் போற்றி

ஆக்கியோன்

**வீ. மகாராச பிள்ளை L. M. P.**

12—10—'60

இஃது ஆக்கியோனது பெற்ரேர்

**குலசை. ஆ. வீரபாகு பிள்ளை (Late)**

**சங்கரவடிவு அம்மாள்** (85 வயசு)

ஆகியவர்களின் நினைவுக்காக

**தன் அறுபதாம் ஆண்டு**

நிறைவு தினமாகிய 12—10—1960-ல்

சார்வரி வருஷம் புரட்டாசி மாதம் திருவாதிரை நாளில்

வெளியிடப் பெற்றதாகும்.

"ஓம்"
என்பது பருப்பொரு
ளாம் புலனுணர்வை நுண்
பொருளாம் அறிவுணர்வாய்
மாற்ற வல்லதோர் மந்திர
மாம் இறை வணக்கச்
சொல்லாதலின் வணங்குக
மீண்டும் மீண்டும்
ஓம் பிரணவ சொரூபா!
ஓம் அணங்கு முருகா!!
ஓம் சிவ குருபரனே!!!
எம்பெருமானே! உமதருளொளி காணற்கரிதே எனினும், குரு
டினும் குருடுமுணர்வானெளிதேயாம். கடையேன் இறப்பாம்
கடலுட் பாறையில் மோதுண்டு, என் யாக்கையாம்
படகிழந்து மீண்டுமொன்று தேடாது காப்பீராக.
பிறவி அஞ்ஞானமாம் எளியேன் ஞானமாம்
கரை நோக்கி வாழ்க்கையாம் கடல்கடக்கு
தும். கைம்மாறேதும் கொடுக்கிலே
னெனினும் சுக்கான் பிடியுமெ
தென்றேயுணர்வேன். இது
வும் உமது பேரருளோ?
பெருங் கருணையோ? அற்
றேல் பேரன்புதானோ? அறி
யேனே! தேவரீரே உமதடிக்கன்பே
செலுத்துபவனுவேன். மற்றிரண்டும்
செலுத்துவான் ஆற்றலின்றுதலின். அந்தோ!
ஆழி சீற்றங்கொள்வானேன்? இதுவும் உமது
திருவுளச் செயல்தானோ? எம்படகையழித்தத்தூடென்
னையே அழித்தருள் செய்வான்தானோ? எனினும் நாயேன் நடுக்குறு
வானுவேன். ஐயோ! அடியேன் அஞ்ஞானந்தானே எம்பெருமானே!

**பேரின்ப சாந்தியின் அறிகுறி**
**சிந்தித்துத் தெளிவதே கடமையாம்**

உயிராம் எமக்கே உயிராகும் ஈஸ்வரா போற்றி
உயிராம் எமக்கே உலகூட்டும் ஈஸ்வரா போற்றி
உலகை விரித்து ஆட்டும் ஈஸ்வரா போற்றி
உயர் சங்காரம் செய்து ஒடுக்கும் ஈஸ்வரா போற்றி
ஊனுடலின்றியே உயிர்க்க வல்ல ஈஸ்வரா போற்றி
உளத்தினால் தொழில் செய்ய வல்ல ஈஸ்வரா போற்றி
உள்ளத்துள் கள்வனாம் ஈஸ்வரா போற்றி
உயிர் உணர்வின் உள் ஒளியாம் ஈஸ்வரா போற்றி
உயிர் உணர்வை உய்விக்கும் ஈஸ்வரா போற்றி
உய்வித்து எமை இலதாக்கும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

அறிவே தம் வடிவமாம் ஈஸ்வரா போற்றி
அறிவுக்கு அறிவிக்கும் ஈஸ்வரா போற்றி
அறிவிப்பான் தான் அறியும் ஈஸ்வரா போற்றி
அறிந்தும் தான் அழுந்தா ஈஸ்வரா போற்றி
அழுத்தி வினை கொள்விக்கும் ஈஸ்வரா போற்றி
அழுத்தியே மெய் உணர்த்தும் ஈஸ்வரா போற்றி
அன்பின் ஆதாரமேயாம் ஈஸ்வரா போற்றி
அன்பனுக்கு அடிமை செய்யும் ஈஸ்வரா போற்றி
அன்பே காட்டி அடிமை கொள்ளும் ஈஸ்வரா போற்றி
அடிமைகொண்டு இன்பளிக்கும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

இச்சை எமக்கிசைத் தூட்டும் ஈஸ்வரா போற்றி
இருவினைப் பயன் கூட்டும் ஈஸ்வரா போற்றி
இன்ப துன்பம் தமக்கிலா ஈஸ்வரா போற்றி
இன்பம் தம் வடிவேயாம் ஈஸ்வரா போற்றி
இருள் காணு ஒளி வடிவாம் ஈஸ்வரா போற்றி
இருள் நீக்கி எமை ஒளியாக்கும் ஈஸ்வரா போற்றி
இருவினை ஒப்பு காட்டும் ஈஸ்வரா போற்றி
ஒப்புகாட்டி என்வினை அகற்றும் ஈஸ்வரா போற்றி
இறப்புஇல் தவம் கூட்டும் ஈஸ்வரா போற்றி
தவத்தில் மெய்ஞானமூட்டும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

ஒட்டுதலால் உயிரேயாம் ஈஸ்வரா போற்றி
ஒட்டின்றித் தாமேயாம் ஈஸ்வரா போற்றி
ஒட்டி ஒட்டாதுடனுமாம் ஈஸ்வரா போற்றி
உடனுமாய் சாட்சியுமாம் ஈஸ்வரா போற்றி
ஒட்டுதலால் ஒரு பொருளாம் ஈஸ்வரா போற்றி
உண்மையால் மறு பொருளாம் ஈஸ்வரா போற்றி
ஒட்டி ஒட்டி மெய்புணர்த்தும் ஈஸ்வரா போற்றி
மெய்யுணர்த்தி பொய்யகற்றும் ஈஸ்வரா போற்றி
பொய்யகற்றி துன்பம் ஓட்டும் ஈஸ்வரா போற்றி
துன்பம் ஓட்டி இன்பம் கூட்டும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

காட்டி உபகரிக்கும் ஈஸ்வரா போற்றி
கண்டும் உபகரிக்கும் ஈஸ்வரா போற்றி
கைம்மாறு கருதாத ஈஸ்வரா போற்றி
கருத்தில் மாறு செய்யாத ஈஸ்வரா போற்றி
காரணத்தில் நிமித்தனும் ஈஸ்வரா போற்றி
காருண்ய காரணனும் ஈஸ்வரா போற்றி
கருவி இன்றியே காண வல்ல ஈஸ்வரா போற்றி
கருவைக் கண்டு கூட்டவல்ல ஈஸ்வரா போற்றி
கருவில் ஆட்டி ஊட்ட வல்ல ஈஸ்வரா போற்றி
கருவை விட்டு மீட்ட வல்ல பரமேஸ்வரா போற்றி
போற்றி.

தமக்கொரு தலைவனிலா ஈஸ்வரா போற்றி
தலைமை கண்டு தாம் ஒடுங்கா ஈஸ்வரா போற்றி
தம்மைத் தாமே காட்டும் ஈஸ்வரா போற்றி
தம்மைக் காட்ட எம்மைக் காணும ஈஸ்வரா போற்றி
தம்மைக் காட்டி எம்மைக் கூட்டும ஈஸ்வரா போற்றி
தம்மைக் காண தாம் காணும் ஈஸ்வரா போற்றி
தம்மைக் கண்டு எம்மையும் காட்டும் ஈஸ்வரா போற்றி
தம்மைத்தான் கண்டும் தம்மைப்பற்று ஈஸ்வரா போற்றி
தம்மைத்தான் பற்றும் குற்றமில்லா ஈஸ்வரா போற்றி
தம்மையே எமக்கீந்தருளும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

நின்னை நினைக்கும் மதிதந்த ஈஸ்வரா போற்றி
நினைக்கும் எனை நீங்காத ஈஸ்வரா போற்றி
நீங்கா தென் நினைவில் உறும் ஈஸ்வரா போற்றி
நினைவில் நின்றுன் நிலை காட்டும் ஈஸ்வரா போற்றி
நிலைகாட்டி என் நிலைமாற்றும் ஈஸ்வரா போற்றி
நிலைமாற்றி எனை நிலைக்க வைக்கும் ஈஸ்வரா போற்றி
நிலைக்கவைத்து நிம்மதி யருளும் ஈஸ்வரா போற்றி
நிம்மதி யருளி எனை நிமலனுக்கும் ஈஸ்வரா போற்றி
நிமலனுக்கி நின்னடி வைக்கும் ஈஸ்வரா போற்றி
நின்னடி வைத்தெனை ஆண்டருளும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

எங்கும் எவற்றும் உறும் ஈஸ்வரா போற்றி
எம் அகக்குறை காணவல்ல ஈஸ்வரா போற்றி
எம் அறிவேயாய் மெய்யுணர்த்தும் ஈஸ்வரா போற்றி
எம்மூர்த்தியாய் முன்னின்றுணர்த்தும் ஈஸ்வரா போற்றி
எம் வடிவ குருவுமாய் பின்னுணர்த்தும் ஈஸ்வரா போற்றி
எமதுயாமென் றென்றிலதாக்கும் ஈஸ்வரா போற்றி
எம்மை இருந்தபடி இருப்பதாக்கும் ஈஸ்வரா போற்றி
எம்மைத் தம் ஓங்குணர்வி னுள்ளடக்கும் ஈஸ்வரா போற்றி
எம் உள்ளத்துள் இன்பொடுக்கும் ஈஸ்வரா போற்றி
எம்மைத் தூங்காமல் தூங்குவிக்கும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

பற்றுவோரைப் பண்படுத்தும் ஈஸ்வரா போற்றி
பண்பட்டோர் பற்றறுக்கும் ஈஸ்வரா போற்றி
பற்றறுத்து பரஞ்சோதி காட்டும் ஈஸ்வரா போற்றி
பரஞ்சோதி காட்டி பரவசப் படுத்தும் ஈஸ்வரா போற்றி
பரவசப்படுத்தி பரமேயாக்கும் பரமேஸ்வரா போற்றி
போற்றி.

போற்றி ஓம் போற்றி
போற்றி சிவம் போற்றி.

உயிர் நலம் கருதி [நலம்=உயிர் தன் உண்மை, பொருள் உண்மை, இறை உண்மை உணர்ந்து இன்பம் பெறுதல்] பேறறிவும் ஆற்றலும் அன்பும் உடைய இறைவனால் உயிருடன் இணைக்கப் பெற்றதாகும் உடல். இவ்வுடல் உயிர் நலமடையுமுன் உயிரை விட்டு நீங்குமாயின் இந்நீக்கம் உயிர் நலத்திற்கு இடையூறுதலின் உடல் மீண்டும் உயிருடன் கூடுதலே நியமமாம். உடல் நீக்கமும் உயிர் நலம் பெறுதலும் உடன் நிகழுமாயின் உடல் மீண்டும் உயிருடன் கூடுதல் அவசியமின்றாம், இறைவன் கருத்து நிறைவேறிற்றதனால். எனவே உடல் மீண்டும் உயிருடன் கூடுவது மில்லையாம். இதுவே உயிருக்கு விடுதலையாம், வெற்றியாம், நியமமுமாம்.

**வீ. மகாராச பிள்ளை** L. M. P.
30 புதுப்பேட்டை நடுத்தெரு,
பாளையங்கோட்டை
திருநெல்வேலி—2.

எமது ஆங்கில வெளியீடாம் " பழமைக்கும் புதுமைக்கும் அப்பாலாம் உண்மை" "Truth Ancient and Modern" என்கிற புத்தகத்தில் உள்ள சில மொழிபெயர்ப்புக் கருத்துக்கள்.

அரசியல் சட்டம் மக்களின் கொடூரச்செயல்களை மாத்திரமே கண்டுபிடிக்கவும் தடுக்கவும் வல்லதாம். மார்க்கங்களின் திட்டம் மக்களின் கொடூர எண்ணங்களையே கண்டுபிடிக்கவும் தடுக்கவும் வல்லதாம். எனவே மார்க்கங்களின் உயர்வையும் அவசியத்தையும் கண்டு கடைப்பிடித்துப் போற்றுதலே மேன்மக்களின் கடமையாம். மக்களிற் பெரும்பாலோர் இவ்வுயர்வைக் காணவல்லரல்லாதாராதலின் (சிந்திப்பான் வேண்டும் பொறுமையும் ஆற்றலும் இலவாதலான்) மார்க்கங்களைத் தூற்றுபவர்களாய் மாறிக்காணப்படும் இக்காலத்தில் "பெரும்பான்மையோர் கருத்தே மெய்" என்று எண்ணி நடப்பது மக்கள் தரத்தையே கீழ்ப்படுத்திவிடும் என்கிற உண்மை சிந்தித்து உணரற் பாற்றதாம்.

மாக்கள் அறிவைக் காட்டிலும் மக்களறிவின் மேம்பாடு தன்னைப் பற்றியும் தன் முடிவைப்பற்றியும் உள்ள 'உண்மை'யைச் சிந்தித்தறிவான் முயற்சிப்பதேயாம். 'உண்மை,' விஞ்ஞானிகளின் புலனுணர்ச்சிக்கு எட்டுவதன்று தான் எனினும் உண்மை நாட்டமுடைய மெஞ்ஞானிகளின் அறிவுணர்ச்சிக்கு எட்டாது போவது மன்றும்.

உண்மையான இந்து மார்க்கம், அதாவது ஆலய வழிபாட்டுக் கொள்கை, கல்வணக்கம் செய்தல் உண்மையில் முற்காலத்தே உள்ள பொதுவுடைமைக் கொள்கையேயாம். இந்தியப் பொதுவுடைமைக் கொள்கையேயாம். மக்கள் நடையில் முற்கால முதலே இருந்து வருகிற பொதுவுடைமைக் கொள்கையேயாம். பழக்கத்திற்கு இலகுவில் கொண்டுவரச் சாத்தியமான பொதுவுடைமைக் கொள்கையேயாம். அளவையறிவிற்குப் பொருத்தமான தெய்வ ஆட்சியேயாம். சிந்தித்து உண்மை கண்டுகொள்வதே கடமையாம்.

தற்காலப் பொதுவுடைமைக் கொள்கை அதாவது இரஷ்யப் பொதுவுடைமைக் கொள்கை ஒரு சில மக்களின் பயங்கர ஆட்சிக்

கொள்கையாம். உண்மைப் பொதுவுடைமைக் கொள்கைக்கும் மக்கள் பொதுநலக் கொள்கைக்கும் மனிதப் பிறப்புரிமைக் கொள்கைக்கும் அதாவது எதேச்சைக் கொள்கைக்கும் மாறுபட்ட கொள்கையாம். தற்காலப் பொதுவுடைமைக் கட்சியினர் அதாவது இரஷ்யப் பொதுவுடைமைக கட்சியினர் கையாளும் கோரப்புரட்சிகர முறையைக் காட்டிலும் நேர்மையானதும் பூரணத்துவம் அடைந்ததும் மக்கள் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான சாந்த சமாதான முறையில் நமது பாரத நாட்டில் இந்தியப் பொதுவுடைமைக் கொள்கையை நிலை நாட்டவேண்டும். நிலைநாட்ட முடியும் என்கிற உண்மையை சிந்தித்து உணர்ந்துகொள்வதே கடமையாம்.

பெரும்பாலோர் அபிப்பிராயப்படும் காரணத்தினுல் மட்டும் ஒரு கருத்தை மெய்யென்று கொள்ளல் தவரும். மக்களிற் பெரும்பாலோர் ஆழ்ந்த சிந்தனைசெய்ய வல்லரல்லாராதலின். வாசித்தலின் பலனை சிந்தித்தலே தருவதாம். மெய்ச்சிந்தனையின் முதிர்ச்சியே மெய்யுணர்ச்சியாம். எனவே சிந்தித்துப் பயன்பெறுதலே கடமையாம்.

'சடசத்தி' செயல் (மாற்றம்) செய்கின்றது.

'சித் சத்தியும்' செயல் (மாற்றம்) செய்கின்றது.

'சட சத்தி' சடத்தில் (ஐம்புலனுல் அறியப்படும் பொருளில்) தங்குவதாம்.

'சித் சத்தி' சித்தத்தில் (ஐம்புலனையே அறியும் பொருளில்) தங்குவதாம்.

'சடம்' அறிவன்மையை உணர்த்த நிற்பதாம்.

'சித்து' அறிவுண்மையை உணர்த்தி நிற்பதாம்.

'அறிவின்மை' கட்டாயப்படுத்தி நிற்கும் தன்மைத்தாம்.

'அறிவுண்மை' அறிவை விளக்கி யுத்தி காட்டி நிற்கும் தன்மைத்தாம்.

'கட்டாயப்படுத்தி நிற்றல்' எதேச்சையை கீழ்ப்படுத்துவதாம் (நசிப்பதாம்)

'யுக்தி காட்டி நிற்றல்' எதேச்சையை நேர்மைப்படுத்துவதாம் (வளர்ப்பதாம்)

'எதேச்சை' மக்களின் பிறப்புரிமையாம்.

'எதேச்சை' உணவைக்கூட வெறுக்கவும் வல்லதாம்,

'உணவு' எதேச்சையை வெறுப்பதன்ரும் (உணவுக்காக எதேச்சையை வெறுக்கமுடியாது.)

'உணவு' எதேச்சைக்கு ஈடாகாதாதலின்.

'எதேச்சை' மார்க்கம் என்னும் பெயரால் நிலவும் மதியூகப் பொது உடைமைக் கொள்கையை வரவேற்கின்ற தன்மைத் தாம்.

'எதேச்சை' அரசியல் என்னும் பெயரால் நிலவும் தடியூகப் பொதுவுடைமைக் கொள்கையை வெறுக்கின்ற தன்மைத்தாம்.

பழங்காலத்து மெய்ஞ்ஞானிகள் மக்கள் பொது உடைமைக் கொள்கையை மக்கள் நடைமுறையில் நிலவும்படி செய்த முறைமையே மகிழ்ச்சிகர மார்க்கம் என்பதாம்.

ஒரு சில தற்காலத்து விஞ்ஞானிகள் தங்கள் பொது உடைமைக் கொள்கையை மக்கள் நடையில் புகுத்திவரும் முறைமையே நவீன புரட்சிகர அரசியல் என்பதாம்.

இவற்றுள் எந்த முறை அறிவுடைத்து என்பதை சிந்தித்துக் கண்டு கொள்வதே கடமையாம்.

ஒருவன் வாழ விரும்பும் நேர்மை வாழ்க்கை தன் மனச்சாட்சிக்கே விரோதமில்லாத முறையில், மெய்யாகவே நடைமுறையிலும் இருக்கவேண்டும் என்கிற புத்தியை எழுப்பும் காரணமாக அவனது தனிவுடைமைகளை மக்களின் பொதுவுடைமைகளாக மாற்றிக் கருதி வாழ்வதே நேர்மையான புத்தியாம் என்று தானே எதேச்சையாய்க் கருதும்படி செய்வதின் மூலம் பொது உடைமைக் கொள்கையைப்

பரப்பி நிலைநாட்டுவது கோரப் புரட்சிகரமான கட்சிக்கொள்கை மூலம் நிலைநாட்டுவதைக் காட்டிலும் மிகவும் மனிதத் தன்மை வாய்ந்ததேயாம். மிகவும் விரும்பத்தக்கதேயாம். மிகவும் சந்தோஷகரமாக வெற்றிபெறும் முறைமையேயாம். சிந்தித்து உண்மை காண்க.

## உங்களுக்குத் தெரியுமா? இந்த உண்மை!

**Anarchism or Socialism** என்ற ஸ்டாலின் புத்தகம் (பக்கம் **20, 21**) கருத்தின் பிரகாரம் இரஷ்யப் பொதுஉடைமைக் கட்சியினர் கண்ட அடிப்படை நியாயங்கள் இம்மூன்றேயாம்:—

**1.** உலகப் பொருட்கள் எல்லாம் மாற்றம் அடைந்துகொண்டே இருக்கின்றன.

**2.** உண்மையே மாறுகின்றது.

**3.** ஆகவே நீதியும் மாறவேண்டும்.

அவர்கள் கொண்ட முடிவோ பின்வரும் இரண்டேயாம்:

**1.** தனி மனிதனின் உடைமையை பலாத்காரத்தில் அவனைக் கொன்ருயினும் பொது உடைமையாக்குவது நீதியேயாம்.

(இரஷ்யரின் உலகநீதி)

2. இந்நீதியை நிலைநாட்டுவதற்குத் தகுந்த முறை புரட்சி ஒன்றேயாம்.

**எனது விமர்சனம்**

அவர்களது நேற்றைய நீதி இன்றைய அநீதியாம். இன்றைய அநீதி நாளைய நீதியாம். அவர்களது அன்றன்றைய நீதியை நிலைநாட்டும் முறைமையாம். "புரட்சி" நாட்டையும், சமூகத்தையும், தனியாரையும் விட்டு என்றென்றும் நீங்காததாம். ஆகவே என்றும் எங்கும் புரட்சி நிலைத்து அமைதியைக் குலைப்பதாம். மனிதனுக்கு எப்போதும் மன சஞ்சலமேயாம். ஒருபோதும் மனநிம்மதி கிடையாதுபோம்.

நாடு பிறந்த அன்றே நன்மையும் பிறந்துள்ள நம்நாட்டு ஆதாரக்கொள்கையாம் "அஹிம்சா தர்மம்" "பிறர்க்கின்னு செய்யாமை புத்தி" நம் நாட்டவர்க்கு இக்கதி வராமல் தடுத்து நம்மைக் காப்பாற்றட்டும். எக்காரணத்தை முன்னிட்டும் மனிதனை மனிதன் அழிப்பது "என்றும் அநீதியே" என்கிற "மாருத உண்மை" "மார்க்கக் கொள்கை" நம் நாட்டில் எக்காலத்தும் நிலைத்து இந்தியரின் உலக நீதியாய், உலகெங்கும் பரவட்டும் என்பதேயாம்.

**மேற்கண்ட மொழிபெயர்ப்புகளின் சாரம்:—**

அரசியல் சட்டங்கள் எத்தனை இருந்தாலும் மார்க்கத் திட்டங்களும் மனிதனை நேர்மைப்படுத்துவதற்கு இன்றியமையாத சாதனமே என்பதாம். மார்க்கத்தை ஒழித்துக் கட்டுவதற்குப் போடும் திட்டம் உண்மையில் மனிதனையே ஒழித்துக்கட்டுவதற்குப் போடும் திட்டமாம் என்பதே.

**மார்க்கங்கள் எல்லாம் வளர்க!**

**இறை வணக்கங்கள் ஓங்குக !!**

**மக்கள் எல்லாரும் வாழ்க !!!**

# சன்மார்க்கம் இலவச வெளியீடு 10.

**விளக்கம் வேண்டுவோர் நேரில் பெறுக.**

**ஜுபிடர் அச்சகம், பாளையங்கோட்டை — 1960.**